**தலைப்பு 324 - முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டன. இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய தொகுப்பு அறிக்கை 2022 யூன் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதி நிலைமைக்கூற்றுத் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

---

## 2.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அடைந்து கொள்ளாமை

---

வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளின் நோக்கங்களை எதிர்பார்த்த மட்டத்தில் அடைந்து கொள்ள முடியாத சந்தர்ப்பங்கள் பினவருமாறு அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின மற்றும் மாகாண சபைகளின் உள்ளகக் கணக்காய்வு அலகுகளை முறைமைப்படுத்தல் மற்றும் வலுப்படுத்தலின் கீழ் பல்வேடு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்பார்த்தவாறு முழுமையாக நிறைவேற்றிக்கொள்ள முடியாதிருந்ததுடன், அதன் செயன்முன்னேற்றம் 50 சதவீதத்தினை விட குறைவடைந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உள்ளக கணக்காய்வு செயன்முறைகளை நெறிப்படுத்துவதற்கு பயிற்சி பட்டறைகள் தயார் செய்யப்பட்டுள்ள போதிலும். 2021 இல் கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக, பயிற்சி பட்டறைகள் எதிர்பார்த்தபடி நடைபெறவில்லை. திணைக்களம் 2021 ஆம் ஆண்டிற்கான 10 பயிற்சி பட்டறைகளை நடத்தியதுடன், அதில் 4 பட்டறைகளில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி உள்ளக கணக்காய்வாளர்கள் கலந்துகொண்டனர். | இலக்கிடப்பட்ட செயலாற்றல் மட்டத்தினை நிலைகளை அடைய உச்ச அளவில் செயற்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டச் செயலகங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் எழுந்த சிக்கல்கள் தொரட்பில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மாவட்டச் செயலகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகளை மதிப்பீட்டுக்காக பெற்றுக்கொள்ளல் போன்ற அனைத்து பணிகளையும் நிறைவேற்ற எதிர்பார்த்திருந்த போதிலும், எதிர்பார்த்தவாறு அந்த பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. | மாவட்டச் செயலகங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் எழுந்த சிக்கல்கள் தொடர்பில் நடவடிக்கைகள் பல விதங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நான்கு காலாண்டுகளினுள் நடாத்தப்பட்டதுடன், அந்தந்த குழுக்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்காக அந்தந்த காலப்பகுதிகளில் தீர்வு வழங்கப்படுகின்றது.<br><br>சில விடயங்கள் தொடர்பில் செயற்பட திணைக்களத்திற்கு வெளியே உள்ள மற்ற நிறுவனங்களுடன் நாம் செயற்ப வேண்டியிருப்பதால் சிறிது காலம் எடுக்கும்.<br><br>2021 ஆம் ஆண்டு ஏற்பட்ட கோவிட் நிலைமையின் மத்தியில் அலுவலகங்களின் பணிகளைச் செய்ய இயலாமை காரணமாக, திட்டமிடப்பட்ட தேதிகளில் தொடர்புடைய அறிக்கைகளைப் பெற முடியவில்லை, அதன்படி அனைத்து அறிக்கைகளும் தாமதமாகின. எனவே, அதன் முன்னேற்றம் 85 சதவீதமாக இருந்தது. | இலக்கிடப்பட்ட செயலாற்றல் மட்டத்தினை நிலைகளை அடைய உச்ச அளவில் செயற்பட வேண்டியமை. |

## 3. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மொத்த அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 07 வெற்றிடமாக காணப்பட்டன. | 2021.12.31 ஆந் திகதியவில் இந்த திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் 07 வெற்றிடங்கள் நிலவின. | பதவியணியினுள் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |